பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11–4–2023), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*****

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 20–10–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 115–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

81. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 9–11–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 124–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

82. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 29–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 13–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

83. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 26–4–2022 ஆம் நாளிட்ட

அரசாணை (நிலை) எண் 38-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

84. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய ஒழுங்குமுறைகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (அ1) துறையின் 20–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 11–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

85. (i) மதுரையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீடு தீர்ப்பாயத்திற்கு (கூடுதல் ஆயமன்றம்) கூடுதல் உறுப்பினரை (நீதித் துறை) நியமித்தது குறித்தும் மற்றும் (ii) சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீடு தீர்ப்பாயத்திற்கு கூடுதல் உறுப்பினரை (நீதித் துறை) நியமித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (அ1) துறையின் 16–6–2022 ஆம் நாளிட்ட அரசாணை (ப) எண் 130–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

86. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. (2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

87. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. (1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

158. மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)